பத்மவாணி
மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி
சேலம்–636011
தமிழ்த்துறை
மற்றும்
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
(UGC Care Listed Journal E–ISSN 2852–1113)
இணைந்து நடத்தும்
பன்னாட்டுக் கருத்தரங்கம்

**பதிவுப்படிவம்**

பெயர் :

கல்வித்தகுதி :

பணிபுரியும்/பயிலும்

நிறுவன முகவரி :

தொடர்பு முகவரி :

அலைபேசி எண் :

மின்னஞ்சல் :

கட்டண விபரம் :

தொகை :

வங்கியின் பெயர் :

கிளையின் பெயர் :

வரைவோலை எண் :

நாள் :

திரு/திருமதி________________________________________

ஆகிய நான்________________________________________

__________________________________________________

எனும் தலைப்பில் அமைந்த ஆய்வுக் கட்டுரையை மின்னஞ்சலில் அனுப்பியுள்ளேன். கருத்தரங்க விதிமுறைகள் அனைத்தையும் பின்பற்றுவேன் என உறுதியளிக்கிறேன்.

இடம் :

நாள் : கையொப்பம்

(இப்படிவத்தை நகலெடுத்தும் பயன்படுத்தலாம்)

## கருத்தரங்கப் புரவலர்கள்

திரு.கா.சத்தியமூர்த்தி, தாளாளர்
திரு.கா.துரைசாமி, செயலாளர்
பத்மவாணி மகளிர் கல்வி நிறுவனங்கள், சேலம்–11.

## கருத்தரங்க இயக்குநர்

திருமதி இசைவாணி சத்தியமூர்த்தி,
பத்மவாணி மகளிர் கல்வி நிறுவனங்கள், சேலம்–11.

## கருத்தரங்கத் தலைவர்கள்

முனைவர் ரா.ஹரிகிருஷ்ணராஜ், முதல்வர்
பத்மவாணி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
பெரியார் பல்கலைக்கழக ஆட்சிக்குழு உறுப்பினர், சேலம்–11.

முனைவர் பெ.முத்துக்குமார், முதல்வர்
பத்மவாணி மகளிர் கல்வியியல் கல்லூரி, சேலம்–11.

## கருத்தரங்க முதன்மை ஒருங்கிணைப்பாளர்

முனைவர் அ.பழனியம்மாள்,
துணைமுதல்வர் (ம) தமிழ்த்துறைத்தலைவர்
பத்மவாணி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, சேலம் –11
அலைபேசி: 99448 27110, 88383 90763

## இணை ஒருங்கிணைப்பாளர்கள்

திருமதி ஆ.சசிகலா
முனைவர் கே.ஹேமலதா
திருமதி இரா.உஷாராணி
முனைவர் மா.ஜெகதாம்பாள்
திருமதி கோ.உமா
செல்வி இரா.தேவகி
முனைவர் பா.ரமணி

## கருத்தரங்க ஒருங்கிணைப்புக் குழு

தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர்கள்

முனைவர் சி.மதியழகி
முனைவர் செ.பிரேமாவதி
திருமதி ர.ஜெயப்பிரியா
திருமதி ப.பா.சுபாஷினி
திருமதி ந.கவிதா
திருமதி வீ.கோகிலா

# பத்மவாணி

## மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி

தேசியத்தர மதிப்பீட்டில் A+ (CGPA 3.44)
தரச் சான்றிதழ் பெற்ற நிறுவனம்
சேலம்–636011

## முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை
மற்றும்
## சர்வதேசத் தமிழ் ஆய்விதழும்

(UGC Care Listed Journal E–ISSN 2852–1113)

இணைந்து நடத்தும்

## பன்னாட்டுக் கருத்தரங்கம்
## (International Conference on Multidimensional Approaches in Folklore Literature)

# பல்நோக்குப் பார்வையில் நாட்டுப்புற இலக்கியங்கள்

நாள் : 19–10–2022
இடம்: காமராஜர் கருத்தரங்கக் கூடம்
பத்மவாணி மகளிர் கலை
மற்றும் அறிவியல் கல்லூரி, சேலம்–11.



பத்மவாணி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி
சேலம்–636011
பெரியார் பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்றது
Recognized under section 2(f) & 12(B) of UGC Act, 1956 &
an ISO 9001: 2015 Certified Institution
Website: www.padmavani.org

பேரன்புடையீர்,

வணக்கம். எமது பத்மவாணி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியானது பெண்களுக்குப் பெருமை சேர்க்கும் வகையில் 2005 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. 16 ஆண்டுகளாகக் கிராமப்புற ஏழை, எளிய மாணவிகளின் கல்வி மேம்பாடு ஒன்றினையே முதன்மை நோக்கமாகக் கொண்டு செயல்பட்டு வருகின்றது. பல்கலைக்கழக மானியக்குழுவால் தேசியத்தர மதிப்பீட்டில் A+ தரச்சான்றிதழ் பெற்று பெரியார் பல்கலைக் கழகத்தின் கீழ் இயங்கும் சேலம், தருமபுரி, கிருஷ்ணகிரி, நாமக்கல் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்ட கலை அறிவியல் கல்லூரிகளில் முதன்மைப்பெற்ற கல்லூரியாக திகழ்ந்து சீரும் சிறப்புடன் இயங்கிக்கொண்டிருக்கிறது. இக்கல்லூரி பெரியார் பல்கலைக்கழகம் எதிரில் சுமார் 1.கி.மீ. தொலைவில் ஓமலூர் சுங்கச்சாவடி (டோல்கேட்) அருகில் அமைந்துள்ளது.

பெரியார் பல்கலைக்கழக இணைவுபெற்ற இக்கல்லூரியில் மாணவியரின் திறனையும் வேலை வாய்ப்பினையும் கருத்தில் கொண்டு 19 இளநிலைப் பாடப்பிரிவுகளும் 11 முதுநிலைப் பாடப்பிரிவுகளும், 9 ஆய்வு மேற்படிப்புப் பிரிவுகளுடன் முனைவர் பட்டஆய்வு சேர்க்கைக்;கான அனுமதி பெறப்பட்டு சிறப்புடன் இயங்கிகொண்டிருக்கிறது. மாணவியர்க்குக் கல்வியுடன் ஒழுக்கம், தன்னம்பிக்கை, ஆளுமைப்பண்பு, சேவை மனப்பான்மை போன்ற உயரிய நற்பண்புகளை வளர்க்கும் களமாக இக்கல்லூரித் திகழ்ந்து கொண்டிருக்கிறது.

## முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை

2010 ஆம் ஆண்டு முதல் இளங்கலைத் தமிழிலக்கியப் பாடப்பிரிவுடன் முதுகலை மற்றும் ஆய்வியல் நிறைஞர் பட்ட மேற்படிப்புடன் இயங்கிவரும், தமிழ்த்துறையில் இந்தக் கல்வியாண்டு (2021-2022) முதல் முனைவர்பட்ட ஆய்வும் கொண்டுவரப்பட்டுள்ளது. எங்களது துறையில் 9 தங்கப் பதக்கங்களும் 64 மாணவிகள் பெரியார் பல்கலைக்கழக தரவரிசையில் இடம் பெற்று சாதனைப் படைத்துக் கொண்டிருக்கிறார்கள். மேலும் பண்பாடு, கலாச்சாரம், மற்றும் படைப்பாக்கத்திறனை வளர்க்கும் பொருட்டுப் பயிலரங்கம், உரையரங்கம், சிறப்புரைகள், பயிற்சிப் பட்டறைகள் போன்ற பல்வேறு நிகழ்வுகளை நிகழ்த்தி வருகின்றது. ஆராய்ச்சியை மேம்படுத்தும் நோக்கில் 2013ஆம் கல்வியாண்டு செம்மொழி தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் நிதி நல்கையில் 'சங்க இலக்கியங்களில் அகத்திணைக் கோட்பாடுகள்' எனும் தலைப்பில் 10 நாள் பயிற்சி பட்டறை நடத்தப்பட்டது. 2016 ஆம் கல்வியாண்டில் 'பன்முகநோக்கில் தமிழ் இலக்கியங்கள்' எனும் தலைப்பில் ஒரு நாள் தேசிய கருத்தரங்கம் நடத்தப்பட்டது. 2017 ஆம் கல்வியாண்டில் 'தமிழ் இலக்கியங்களில் வாழ்வியல் விழுமியங்கள்' எனும் தலைப்பில் ஒரு நாள் தேசிய கருத்தரங்கம் நடத்தப்பட்டது. 2018ஆம் கல்வியாண்டில் 'தமிழ் இலக்கியங்களில் அறச்சிந்தனைகள் எனும் தலைப்பில்' பன்னாட்டுக் கருத்தரங்கம் நடத்தப்பட்டது. 2019ஆம் கல்வியாண்டில் 'இலக்கண இலக்கியங்களில் வாழ்வியல் கூறுகள்' எனும் தலைப்பில் ஒருநாள் பன்னாட்டுக் கருத்தரங்கம் நடத்தப்பட்டது. 2021ஆம் கல்வியாண்டில் 'தமிழ் இலக்கியங்களில் பண்பாட்டுப் பதிவுகள்' எனும் தலைப்பில் ஒருநாள் பன்னாட்டுக் கருத்தரங்கம் நடத்தப்பட்டது. இதனைத் தொடர்ந்து சர்வதேசத் தமிழ் ஆய்விதழுடன் இணைந்து பல்நோக்குப் பார்வையில் நாட்டுப்புற இலக்கியங்கள் என்ற பொருண்மையிலான ஒருநாள் பன்னாட்டுக் கருத்தரங்கினை நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

## சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், இந்தியாவின் முதல் Google Scholar, CrossRef Indexed மற்றும் DOI எண் பதிவுபெற்ற தமிழ் ஆய்விதழாகவும், பல்கலைக்கழகமானியக் குழுவின் அங்கீகாரம் பெற்ற ஆய்விதழாகவும், பல்வேறு ஆய்வு மேம்பாட்டுப் பயிலரங்குகளையும் கருத்தரங்குகளையும் முன்னெடுத்து தொடர்ந்து நடத்திக் கொண்டிருக்கின்ற ஆய்விதழாகவும் இருந்து வருகின்றது. அத்துடன் தமிழாய்வுகளை உலகத்தரத்திற்கு உயர்த்தும் நோக்கில் ஆய்வுப்புல வல்லுநர்களின் மதிப்பீட்டைப் பெற்றுத் தரமான ஆய்வுக்கட்டுரைகளை வெளியிடுதல், அவற்றை உலகளாவிய பயன்பாட்டிற்கும் அங்கீகாரத்திற்கும் ஏற்றவகையில் எண்ணிமப்படுத்துதல் (digitization), குறுந்திட்ட ஆய்வுகளுக்கு நிதியுதவி அளித்தல் முதலிய பணிகளைத் தொடர்ந்து செயல்படுத்தி வருகின்றது. மேலும் பன்னாட்டுத் தமிழறிஞர்களோடு தொடர்புகளை ஏற்படுத்திக்கொண்டு தமிழ் ஆய்வு வளர்ச்சிக்கான முன்னெடுப்புப் பணிகளை மேற்கொள்ளுதல், ஆய்வாளர்களுக்கும், ஆய்வுப்புல அறிஞர்களுக்குமிடையே ஆய்வு சார்ந்த உரையாடுவதற்கும் விவாதிப்பதற்குமான வாய்ப்புகளையும், அதற்கான சூழலையும் ஏற்படுத்தித் தருதல், தமிழ்ச் சூழலில் இது வரையிலான ஆய்வுப் போக்குகளையும் அவற்றின் போதாமைகளையும் மதிப்பிட்டு, புதியகளங்களில் புதிய அணுகுமுறைகளில் ஆய்வு செய்ய ஆய்வாளர்களை ஊக்குவித்தல், ஆய்வுத்திறன் மேம்பட்ட செழுமைமிக்கதொரு ஆய்வாளச் சமூகத்தை உருவாக்குதல் போன்ற பல்வேறு ஆய்வுவளச் செயல்பாடுகளில் அதிக அக்கறையோடு முன்னிற்கின்றது. இதன் தொடர்ச்சியாக இக்கருத்தரங்கைப் பத்மவாணி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியுடன் இணைந்து நடத்தத் திட்டமிட்டுள்ளது.

## கருத்தரங்க நோக்கம்

தமிழகத்தில் நாட்டுப்புறவியல்துறை வளர்ந்;துவரும் துறைகளுள் ஒன்றாகும். இத்துறை மானிடவியல், சமூகவியல், உளவியல், தத்துவம், வரலாறு, மொழியியல் ஆகிய துறைகளுடன் பின்னிப் பிணைந்து வளர்ந்து வருகின்றது. ஒருநாட்டு மக்களின் நாகரிகத்தை, பாண்பாட்டை, பழக்க வழக்கங்களை வரலாற்றை, நாட்டு நடப்பை உண்மையான முறையில் படம் பிடித்துக் காட்டுகின்றது. இலக்கியங்களில் நாட்டுப்புற இலக்கியம் சமுதாய வளர்ச்சியைக் காட்டும் கண்ணாடியாகத் திகழ்ந்துக் கொண்டிருக்கிறது. அந்த வகையில் நாட்டுப்புற இலக்கியங்களைப் பல்நோக்கு பார்வையில் ஆய்வுசெய்து இத்துறையின் ஆய்வுக்களங்களை விரிவுப்படுத்துவதே இக்கருத்தரங்கத்தின் நோக்கமாகும்.

## ஆய்வுப் பொருண்மைகள்

நாட்டுப்புற இலக்கியங்களைப் பிற துறைகளோடு ஒப்பிட்டும், கோட்டுபாட்டு முறையிலும், கலைகள், விளையாட்டுகள், தொழில்கள், பாடல்கள், கதைகள், கதைப்பாடல்கள், விடுகதைகள், பழமொழிகள் போன்ற பொருண்மைகளின் அடிப்படையிலும் ஆய்வுகள் நிகழ்த்தலாம்.

கட்டண விபரங்களையும், கட்டுரைகளையும், மற்றும் பதிவுப்படிவத்தையும் இணைத்து pvtamilseminar2022@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு 05.07.2022 ஆம் தேதிக்குள் அனுப்பவும். கட்டுரையில் ஆசிரியர் பெயர், பதவி, முழு முகவரி, தொடர்பு எண், மின்னஞ்சல் முகவரி உள்ளிட்ட விபரங்களை கட்டாயம் பதிவு செய்யவும்.

## கட்டுரையாளர்கள் கவனத்திற்கு,

கட்டுரை அமைப்பு கீழே கொடுக்கப்பட்டுள்ளது. கட்டாயம் அதில் கொடுக்கப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளைப் பின்பற்றி கட்டுரையாளர் கட்டுரையைச் சமர்ப்பிக்க வேண்டும்.

ஆய்வு தன்னளவில் முழுமையானதாக அமைய வேண்டும். ஆய்வுக்கட்டுரைகள் சொந்த முயற்சியில் உருவான புதிய மற்றும் அசல் கண்டடைவாக இருத்தல் வேண்டும். இதற்கு முன் வேறெந்த ஊடகங்களிலும் வெளிவராததாக இருக்க வேண்டும்.

கட்டுரை தமிழில் மட்டுமே இருத்தல் வேண்டும் (கட்டுரைத்தலைப்பு ஆய்வுச்சுருக்கம் தமிழில் தரலாம் ஆங்கில மொழி பெயர்ப்பு கட்டாயம் அல்ல)

கருத்தரங்க நாளன்று ஆய்வாளர்கள் தங்களின் ஆய்வுக்கட்டுரைகளை வாசித்தளிக்க வேண்டும். அவர்களுக்குச் சான்றிதழ் வழங்கப்படும். சமர்ப்பிக்கப்பட்ட கட்டுரைகள் ஆய்விதழுக்கு அனுப்பி வைக்கப்படும். அவ்வாறு பெறப்பட்ட கட்டுரைகள் சர்வதேசத் தமிழ் ஆய்விதழின் (UGC Care Listed Journal) வல்லுநர் குழுவின் மதிப்பீட்டிற்கு உட்பட்டு வெளியிடுவதற்குப் பரிந்துரைக்கப்படும்.

தேர்ந்தெடுக்கப்படும் கட்டுரைகள் மட்டுமே சிறப்பிதழாக வெளியிடப்படும். தேர்வு செய்யப்பட்டபின் கட்டுரையாளர்கள் ரூ.2000 செலுத்த வேண்டும். ஆய்விதழில் வெளியிடுவதற்கான கட்டணம் தேர்வு செய்யப்பட்ட பின்னர் பெறப்படும்.

ஆய்வுக்கட்டுரையைச் சமர்ப்பிக்க இறுதி நாள் (05.07.2022)

## கருத்தரங்கக் கட்டணம்

| | | |
|---|---|---|
| பேராசிரியர்கள், ஆய்வாளர்கள், ஆர்வலர்கள்: | | ரூ. 400 /- |
| பார்வையாளர்கள் | : | ரூ 300 /- |
| வெளிநாட்டவர் (USD) | : | $ 35 |

### கருத்தரங்கக் கட்டணத்தை செலுத்த வேண்டிய வங்கிக் கணக்கு விவரம்

**SB A/C NO: 0075073000002720**
**IFSC CODE: SIBL0000075**
**BANK NAME: South Indian Bank**
**BRANCH: Salem Main Branch**
**A/C HOLDER NAME: Padmavani Arts & Science College (Women)**